IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.41 /2025

dated : 03.03.2026

P.W. 1

Name சரவணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். வழக்குரை விவரங்களை படித்துப் பார்த்தேன். 1, 2 பிரதிவாதிகள் என் பெற்றோர், 3ம் பிரதிவாதி என் சகோதரி. 1ம் பிரதிவாதி அரசு மருத்துவமனையில் மருந்தாளுநராக இருந்தார். 2ம் பிரதிவாதி அரசு மருத்துவமனையில் செவிலியராக இருந்தார். 4வது தபசில் சொத்தை 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்யவும், 1ம் தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யவும் பரிகாரம் கோரியுள்ளேன். 4, 5 தபசில் சொத்துக்கள் 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியாகும் 1ம் தபசில் சொத்து 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது அந்த ஆவணத்தை எழுதிப் பெறும் நாளில் 1, 2 பிரதிவாதிகள் 25 ஆண்டு காலமாக அரசு ஊழியர்களாக இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் ஒரு சொத்தை என் பெயரில் கிரையம் பெறாமல் மற்றவர் பெயரில் கிரையம் பெறுவது சட்டப்படி குற்றம்

என்றால் அவர் என் தாயார் என்பதால் அது குற்றமல்ல. வா.சா.ஆ-1 ஆவணத்தில் கிரைய மறுபயன் தொகையை 2ம் பிரதிவாதி செலுத்தியதாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. கிரைய ஆவணத்தில் அவ்வாறுதான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த பணத்தைக் கொண்டுதான் வா.சா.ஆ.1 எழுதிப் பெறப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் உள்ளது. வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்துள்ளேன் வா.சா-ஆ.1 க்குரிய வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக ஆவணம் தாக்கல் செய்திருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்துக்களை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு என்வசம் ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3 ல் கண்ட சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகள் சுயமாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் படித்தார் என்றால் சரிதான். அவர் அரசு கல்லூரியில் படித்துள்ளார் என்பதால் சொத்துக்களை விற்று படிக்க வைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவக் கல்லூரி கட்டணமாக பெருந்தொகை செலுத்த தேவையில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் வா.சா.ஆ-15ல் கண்ட வீட்டினை தங்களது பணியில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்ட கட்டப்பட்ட வீடு என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 300 மதிப்பெண்ணிற்கு 297.5 மதிப்பெண் பெற்று கல்லூரியில் சேர்ந்தார் என்றால் சரிதான். அவர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அரசு விடுதியில் தங்கி படித்தார் என்றால் சரியல்ல ஓராண்டு மட்டும் தங்கியிருந்தார். 4 வருடம்

வெளியே தங்கியிருந்ததற்கான செலவை நானே ஏற்றேன் என்பதற்கு என்வசம் ஆவணங்கள் இல்லை. என் பெற்றோர்தான் செலவு செய்தார்கள். வழக்குரையில் வா.சா.ஆ.16 ல் கண்ட சொத்தை விற்று படிக்க வைத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்தில் கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாடகைதாரர்களுக்கும் எனக்கும் நேரடி ஒப்பந்தம் இல்லை. நான்தான் வாடகைதாரர்களை பேசி முடித்தேன். வாடகைதாரர்கள் எனக்கு வாடகை செலுத்தியதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். ஏ.எல்.எல். மார்க்கெட்டிங் கம்பெனி ஒரு வாடகைதாரர் ஆவார் அவர்கள் முன்பணமாக ரூ.13,40,000/- கொடுத்தார்கள் அதில் எனக்கு ரூ.12,50,000/- என் தாயார் அவருடைய வங்கி கணக்கிலிருந்து எனக்கு அனுப்பினார் நான் உரிமையாளர் என்பதால் அவ்வாறு அனுப்பினார். நான்தான் உரிமையாளர் என்றால் என்னிடம் நேரடியாக பணத்தை அனுப்பியிருக்க வேண்டுமென்றும் நான் உரிமையாளராக இல்லை என்பதால் தான் என் தாயாருக்கு பணத்தை அனுப்பியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் எனக்கு கார் வாங்கி தருவதற்காக Toyota நிறுவனத்திற்கு நேரடியாக செலுத்திய தொகை என்றால் சரிதான். அது நேரடியாக என்னுடைய வங்கி கணக்கிற்கு வரவில்லை கார் நிறுவன கணக்கிற்கு சென்றது. கார் என் பெயரில் வாங்கப்பட்டது. 1ம் தபசில் சொத்தில் சாலை முகப்பில் உள்ள சொத்தை 2ம் பிரதிவாதி கைவசம் நிறுத்திக் கொண்டு அதற்கு பின்பகுதியில் உள்ள இடத்தை என் பெயருக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்றால்

சரிதான். அதற்கான காரணங்களை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். உண்மையில் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சாலையின் முகப்பில் உள்ள சொத்தை கொடுத்திருக்க வேண்டுமென்றும் என்னுடைய சொத்து அல்ல என்பதால்தான் பின்பகுதியில் உள்ள சொத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 மற்றும் 26 எழுதப்பட்ட காலத்தில் நான் அரசுப் பணியில் இல்லை என்றால் சரிதான். நான் தனியார் பள்ளியில் பணிபுரிந்தேன். வழக்குரையில் அதே கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கான வரைபட அனுமதி 1, 2 ம் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-17 ல் கண்ட சொத்தை விற்று ரூ.40,00,000/-யை நான் 1, 2 பிரதிவாதிகளிடம் கொடுத்தேன் என வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதில் சொத்து மதிப்பு ரூ.2,76,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ரூ.40,00,000/- கிரையத் தொகையாக பெற்றேன் என்பது பற்றி என்வசம் தற்போது ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. பொறியாளருக்கு ஒப்பந்தப்படி பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் 2 ம் பிரதிவாதி வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல என்னிடமும் உள்ளது. பணம் கொடுப்பவரிடம்தான் இரசீது வழங்குவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் கண்ட சொத்தை தென்காசி IDBI வங்கியில் அடைமானம் வைக்கப்பட்டது என்றால் சரிதான் அதன் கடன் எண்.2189 ஆகும். அந்த தொகையை கொண்டுதான் வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்தை கட்டிடம் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. நான்தான்

அதில் கடன்தாரராக உள்ளேன் என் பெயரில்தான் கடன் உள்ளது. 1ம் பிரதிவாதிதான் கடன்தாரர் என்றும் நான் பொறுப்பு நிலை ஏற்ற நபர் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிதான் கடனை திரும்ப செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேன். IDBI வங்கி கடன் என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. 09.06.2022ம் தேதியில் அதே வங்கியில் ரூ.5,00,000/- என் பெயரில் கடன் எண்.3193 ஆக கடன் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கான தனிநபர் கடன் என் தந்தைக்கு நேரடியாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கடனிற்கு நான் கடன்தாரர் அல்ல என்றும் பொறுப்பு நிலை மற்றும் ஏற்றவர் என்று சொன்னால் சரியல்ல. அந்த கடன் முழுமையாக செலுத்தி தீர்க்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதை பிரதிவாதிகள்தான் செலுத்தி தீர்த்தனர் என்றால் சரிதான் வாடகை பணத்தைக் கொண்டு செலுத்தினார்கள். வா.சா.ஆ.18 முதல் 20 வரையான ஆவணங்கள் கட்டுமானம் எழுப்புவதற்காக 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரிதான். சங்கரன்கோவிலில் உள்ள தோப்பில் 1 1/4 ஏக்கர் எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு எழுதிக் கொடுத்துள்ள ஆவணத்தில் 3 1/4 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மீதி தோப்பு 1ம் பிரதிவாதி வசம் உள்ளது. இரயில் நகரில் இருக்கும் வீடு 2015ம் ஆண்டு கட்டப்பட்டது. வா.சா.,ஆ-1ல் கண்ட சொத்தை 3ம் பிரதிவாதிக்கு நன்கொடை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில்

செயல்பட்டதால்தான் தற்போது நான் குடியிருக்கும் வீட்டை கட்டுவதற்கான பணத்தை 1, 2 பிரதிவாதிகள் எனக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் வா.சா-ஆ.12, 13 ல் கண்ட சொத்தை 3ம் பிரதிவாதிக்கு நன்கொடை எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12, 13 ல் கண்ட சொத்திற்கான தற்போதைய வருவாய்துறை மற்றும் உள்ளாட்சிதுறை ஆவணங்கள், மின் இணைப்புகள் 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். நன்கொடை ஆவணம் உள்ளதால் அவ்வாறு பதிவாகியிருந்தது. நான்தான் உரிமையாளர் என்றும் எனக்குதான் வாடகை சேரவேண்டுமென்றும் நான் வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தில் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை. 3ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் எழுதி வைத்த நன்கொடை 1, 2 பிரதிவாதிகளையும் தனிப்பட்ட சொத்து என்பதால் அதை கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் கேன்சர் நோயாளிகள் என்றால் சரிதான். எனவே அவர்களுக்கான மருத்துவச் செலவுகள் கூடுதலாக இருக்கும் என்றால் சரிதான். அவர்களுக்கான மருத்துவ சிகிச்சையை 3ம் பிரதிவாதியே மேற்கொண்டு வருகிறார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு போதுமான சொத்துக்களும் நிதியுதவியும் செய்துள்ள நிலையில் 3ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் ஏதும் சேரக்கூடாது என்பதற்காகவே நான் பொய்யான வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலேயே

வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.03 17:06:59 +0530